**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS.6/2018. நாள்.18.12.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பரந்தாமன் | **வயது** | |
| **த/பெ. க/பெ.** | பூசாரி கவுண்டர் | **மதம்** | |
| **முகவரி** | பெரமனூர் | **தொழில்** | |

**வா.சா.2 ஆஜர். 1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. சாட்சியம் அளிக்க முருகேசன் அழைத்து வந்தார். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். தாவா சொத்து விவரம் தெரியும். ஆனால் சர்வே எண் தெரியாது. பிரதிவாதிகளின் சொத்தின் சர்வே எண் தெரியாது. வாதி முருகேசன் எனக்கு மாமா உறவு முறையாகும். நான் கடந்த 4 வருடங்களாக பஞ்சாயத்து தலைவராக உள்ளேன். பஞ்சாயத்து தலைவர் தேர்தலில் எனக்கு வாக்களித்தார். பிரதிவாதிகளும் எனக்கு வாக்களித்தார்கள். 2 பேரும் எனது உறவினர்கள் என்பதால் எனக்கு வாக்களித்திருப்பார்கள். வாதி வீட்டின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. பிரதிவாதி வீட்டின் விஸ்தீரணமும் தெரியாது. 3 1/2 அடி அகலத்திலும் 25 அடி நீளத்திலும் செல்லும் வழிப்பாதை எனக்கு நினைவு தெரிந்தது முதல் செல்கிறது. ஆனால் அந்த வழிப்பாதை எந்த சர்வே எண்ணில் செல்கிறது என எனக்கு தெரியாது. வழியானது தெற்கில் இருந்து வடக்காக சென்று மேற்கு புறமாக செல்கிறது. அந்த வழி யார் நிலத்தின் வழியாக செல்கிறது என்று எனக்கு தெரியாது. அந்த வழியானது பிரதிவாதிகளின் நிலத்தின் வழியாக செல்கிறது என முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. பிரதிவாதி செல்வம் கூலி வேலையும், ஆடு மேய்தல் தொழிலும் செய்து வருகிறார். வாதிக்கும், பிரதிவாதிக்கும் உள்ள கோவில் பிரச்சனைப்பற்றி எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் கோவில் பிரச்சனை என கூறியுள்ளது பற்றி எனக்கு தெரியாது. 1–ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார். தார்சு வீடும், கூறை வீடும் 2 வீடுகள்

உள்ளது. 1–ம் பிரதிவாதி வீடு கட்டி அனுபவித்து வருவது எனக்கு விவரம் தெரிந்த காலம் முதல் தெரியும். முதலில் 1–ம் பிரதிவாதியின் தகப்பனார் வீடு கட்டி அனுபவித்து வந்து தற்போது 1–ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார். வழிப்பாதைக்கும் பிரதிவாதி கட்டிய காம்பவுண்ட் சுவருக்கும் சம்மந்தம் உள்ளதா என்றால் வழிப்பாதையை மறித்து காம்பவுண்ட் சுவர் கட்டப்பட்டுள்ளது. காம்பவுண்டை ராஜாமணி கட்டியுள்ளார். வழிப்பாதையானது ராஜாமணி மற்றும் செல்வத்தின் சொத்துக்களுக்கு நடுவே செல்கிறது. 1–ம் பிரதிவாதியின் நிலத்தில் வழியானது எவ்வளவு இடத்தில் செல்கிறது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் சொல்லியுள்ள வழியின் நீளம், அகலம் தோராயமாக கூறியுள்ளேன். மேற்படி அளவுகளை நான் 3 மாதங்களுக்கு முன்பு பார்த்தேன். அப்போது அதே அளவு தான் இருந்தது. பலமுறை பஞ்சாயத்து செய்ததாக முதல் விசாரணையில் கூறியுள்ள நிலையில் எங்கு வைத்து எப்போது பஞ்சாயத்து செய்தேன் என்றால் நான் பஞ்சாயத்து செய்யவில்லை. அவ்வாறு முதல் விசாரணையில் பஞ்சாயத்து செய்ததாக கூறப்பட்டு இருந்தால் அது தவறாகும். பிரதிவாதிகள் வழியை விட மறுத்து அடைத்து விட்டதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் வழித்தடமே இல்லை என்றும், வழக்கிற்க்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழியை அடைத்த தேதி எனக்கு தெரியாது. வழியை அடைத்த ஒரு வருடத்திற்க்கு மேலாகிறது. அதன் பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்.வீட்டிற்க்கு போகும் வழியை தடுப்பதாக புகார் கொடுத்துள்ளார். நான் காவல் நிலையத்திற்க்கு சென்று சமரசம் பேசினேன். போலீசார் விசாரித்தார்கள் ஆனால் முடிவு எதுவும் கட்டப்படவில்லை. மேற்படி விவரத்தை முதல் விசாரணையில் நான் கூறவில்லை. நான் சொல்வதுபோல் எவ்வித சம்பவமும் நடைப்பெறவில்லை என்றும், வாதி எனக்கு ஆதரவாக வாக்களித்ததால் அவருக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது வழி அடைப்பட்டுள்ளதால் வாதி தனது வீட்டிற்க்கு எவ்வாறு செல்கிறார் என்றால் வாதி வேறு பாதையில் சுற்றி செல்கிறார். வாதி வரும்பாதையில் தேக்கன் வீடு உள்ளது. மற்றொரு வீடு உள்ளது ஆனால் பெயர் தெரியாது. அந்த வழியாக தான் வாதி வருகிறார். வாதிக்கு பிரதிவாதி நிலம் வழியாக வழி கிடையாது என்றும், தற்போது வரும் வழிதான்

அவருக்கான வழி என்றும், மேற்படி சங்கதிகளை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வழியை மறுத்தார் என்று கூறும் சங்கதியானது பொய்யானது என்றும் அவ்வாறு எதுவும் நடைப்பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு தேக்கன் வீட்டு வழியாக காலம், காலமாக வழி உள்ளது என்றும் அதை மறைத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென ஒப்புக்கொண்டார்.

District Munsif cum Judicial Magistrate

SHANMUGANATHAN Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.